# தேசிய கல்வி நிறுவகம், மகரகம

## கல்வி ஆராய்ச்சி முறையியல் டிப்ளோமா பாடநெறி

## Diploma in Educational Research Methodology - 2026

## SLQF Level - III

தேசிய கல்வி நிறுவகத்தின் ஆராய்ச்சி, அபிவிருத்தித் துறையினால் முன்னெடுக்கப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பப்படிவம் கோரப்பட்டுள்ளது.

**01. பாடநெறியின் தன்மை :**

- கல்வி ஆராய்ச்சி பற்றிய டிப்ளோமா கற்கை நெறி, முப்பது (30) கிரடிற்றுக்கள் கொண்ட ஓராண்டுக்குரிய பகுதிநேர, வார இறுதிக் கற்கை நெறியாகும்.
- கலவை (Blended) முறையில், 40% அமர்வுகள் நேர்முக அமர்வுகளாகவும், 60% அமர்வுகள் நிகழ்நிலையிலும் (Online) நடத்தப்படும். இக்கற்கைநெறி இரண்டு கற்கைத் தவணைகளைக் கொண்டதாகும்.
- தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கற்கைநெறி நடத்தப்படும்.

**02. விண்ணப்பத் தகைமை :**

- அரச/ அரச சார்ந்த / தனியார் கல்வி நிறுவனமொன்றில் (பாடசாலைகள், பிரிவெனாக்கள், சர்வதேச பாடசாலைகள்) அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் அதிபராக அல்லது ஆசிரியராக இருத்தல்.
- SLEAS, SLTES, ஆசிரியராக / சிரேஷ்ட ஆசிரிய ஆலோசகராக ISA இருத்தல்.
- தேசிய கல்வி நிறுவக கல்விசார் பணியணி உறுப்பினராக இருத்தல் அல்லது,
- தேசிய கல்விக் கல்லூரி கல்விசார் பணியணி உறுப்பினராக இருத்தல் அல்லது,
- கல்வி ஆராய்ச்சியில் ஆர்வம் காட்டும் கல்வி சார்ந்த ஒருவராக இருத்தல்

**அத்தோடு**

- கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**03. பாடநெறிக்கான தெரிவுமுறை :**

நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும்.

**04. கட்டணம் :**

| | | |
|---|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | : | 500 ரூபாய் |
| பதிவுக் கட்டணம் | : | 2000 ரூபாய் |
| பாடநெறிக் கட்டணம் | : | 50,000 ரூபாய் (சமனான இரு தொகைகளாக இரண்டு தவணைகளில் செலுத்த முடியும்) |

**05. பாடநெறி நடைபெறும் இடம் : தேசிய கல்வி நிறுவகம், மகரகம.**

**06. விண்ணப்பிக்கும் முறை :**

- தேசிய கல்வி நிறுவகத்தின் இணையதளத்தினுள் பிரவேசித்து, பரீட்சைகள் துறையின் வலைப்பக்கத்தில் விண்ணப்பப்படிவம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். https://www.exams.nie.lk/intakes/new
- இது தொடர்பான மேலதிகத் தகவல்களுக்காக 0117601863, 0117601790, 0117601794 என்ற தொலைபேசி இலக்கத்தை வாரநாட்களில் (மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை) அழையுங்கள்.
- விண்ணப்பப் பத்திரத்தை முன்வைத்தல் தொடர்பான தொழில்நுட்பப் பிரச்சினைகள் தொடர்பில் தொலைபேசி 0117601776/0117601777) இலக்கத்தினைத் தொடர்பு கொள்ளவும்.

**07. விண்ணப்ப இறுதித்திகதி 2026.01.15**

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம.**